**செய்தி வெளியீடு எண் : 466** **நாள்: 25.03.2022**

## செய்தி வெளியீடு

### சென்னையில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டிகள் சென்னைப் பல்கலைக்கழக அணி வெற்றி...

சென்னை, இந்துஸ்தான் பல்கலைக்கழகத்தில் 21.03.2022 முதல் 24.03.2022 வரை அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டிகள் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்திய அளவில் வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் ஏறத்தாழ 75 அணிகள் என 300–க்கும் மேற்பட்ட அணிகள் இப்போட்டிகளில் விளையாடி வருகின்றன. இந்த ஆண்டு நான்கு மண்டலங்களிலிருந்தும் 325–க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றதில் 16 அணிகள் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டிக்கு தேர்வுப் பெற்று கலந்து கொண்டது.

சென்னையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை பல்கலைகழகம் அணி (University of Madras) மற்றும் டெல்லி ஜாமியாமிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகம் (Jamiamillia Islamia University, Delhi) ஆகிய பல்கலைக்கழக அணிகள் விளையாடின. இப்போட்டியில் சென்னை பல்கலைக்கழக அணி 97-60 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது. சென்னைப் பல்கலைக்கழக அணியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தங்கும் விடுதியில் இருந்து பயிற்சி பெற்று வருகின்ற 7 வீரர்கள் பங்கேற்றுச் சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு விளையாட்டு விடுதி (Sports Hostel of Excellency) 1997–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் மாணவ, மாணவியர்கள் கூடைப்பந்து, கைப்பந்து, தடகளம், குத்துச் சண்டை, ஜூடோ உள்ளிட்ட விளையாட்டு பயிற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். கூடைப்பந்து போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகின்ற இந்த வீரர்கள், சென்னைப் பல்கலைக்கழக அணிக்காக தொடர்ந்து சிறப்பான பங்களிப்பினை அளித்து வருகின்றனர். மேலும், அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து விளையாட்டுப்

போட்டிகளில் 2001-ஆம் ஆண்டு, பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவிலும், 2004 மற்றும் 2018–ஆம் ஆண்டு ஒடிசா மாநிலம், புவனேஷ்வரிலும், 2015 மற்றும் 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு, சென்னையிலும், என பல்வேறு போட்டிகளில் சென்னைப் பல்கலைக்கழக அணிக்காக விளையாடி வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை, இந்துஸ்தான் பல்கலைக்கழகத்தில், 24.03.2022 அன்று நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மேலாளர்கள் திருமதி சுஜாதா வெங்கடேஷ், பல்கலைக்கழகப் பதிவாளர் பொன்.ராமலிங்கம், இயக்குநர் திரு.அசோக்வர்கீஸ், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in